1969 பிப்ரவரி 26]

மாக பிற்பட்ட புஞ்சைப் பிரதேசங்களாகத் தான் இருக்கின்றன. ஆகவே, அந்தக் கற்கள் கிடைக்கும் பகுதியில் தொழிற்சாலை ஆரம்பித்தால் அந்தப் பகுதி மக்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு இருக்கும். உதாரணமாக, என்னுடைய பகுதியில் சுண்ணும்புக் கற்கள் கிடைக்கின்ற பகுதிக்குப் பத்து மைலுக்கு அப்பால் இன்னொரு பகுதியில் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையைத் தவிர்க்க இன்றைக்காவது அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் உறுப்பினர் இதைப் பற்றி மிகக் கவலையோடு என்னிடம், முன்னால் ஒருமுறை சொல்லியிருக்கிறார்கள். அவர்களே ஒப்புக்கொண்டார்கள். பத்து மைல் தூரம்தான். இருக்கின்ற பிரச்சினையெல்லாம், அவர்கள் இருக்கக்கூடிய மாவட்டம் ஒரு பகுதியாகவும், பத்து மைலுக்கு அப்பால் தொழிற்சாலை ஒரு பகுதியாகவும் அமைந்துவிட்டது. பத்து மைல் தூரத்திற்குப் போக்குவரத்துச் செலவு அதிகமாக ஆவதாக அரசாங்கம் கருதவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : சிமெண்ட் விலை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடிக்கொண்டே இருக்கிறது. இப்படிப் போனால் சாதாரண மக்கள் வாங்க முடியாமல் போய்விடும். ஆகவே, சிமெண்டுக்குப் பதிலாக வேறு உறுதியான பொருள்களைக் கண்டுபிடிக்க பரீட்சார்த்தமாக ஏதாவது முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிமெண்ட் விற்பனை ஆகுமா, அதிலேயே கஷ்டம் இருக்குமா என்றுதான் சிமெண்ட் உற்பத்தியாளர்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அதைப்பற்றி யோசித்தால் நமக்கு ஆபத்து வந்தாலும் வந்துவிடும்.

சிறு தொழில் கழகத்தின் பயன்பாட்டுப் பொருள்கள்

*83 வினா—**திரு. கே. போஜன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சிறு தொழில் காப்பரேஷன் நடத்திவரும் தொழிற் சாலைகளில் உற்பத்தியாகும் சாமான்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய நம் மாநிலத்திலுள்ள பெரிய நகரங்களில், விற்பனை நிலையங்களை நிறுவும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சென்னை, தஞ்சாவூர், நெய்வேலி, திண்டுக்கல், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மகாபலிபுரம், திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் தொழில் வணிக இயக்குநரின் கட்டுப்பாட்டில் தற்போது செயல்பட்டு வரும் விற்பனைப் பெருநிலையங்கள் பல, தொழில்துறையின் கைப்பணிப் பொருள்களையும், தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தின் பயன்பாட்டுப் பொருள்களையும் காட்சிக்கு வைப்பதிலும் அவற்றை விற்பனை செய்வதிலும் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாடு கைப்பணி கூட்டுறவு

விற்பனைச் சங்கம், புதுடில்லி, ஈரோடு, கரூர், உதகமண்டலம், கடலூர், மதுரை, தூத்துக்குடி, வேலூர் ஆகிய இடங்களில் உள்ள அதன் கூட்டுறவு விற்பனைப் பெருநிலையங்கள் அவற்றின் மூன்று சென்னைக் கிளைகள் ஆகியவற்றின் மூலமாகக் கழகத்தின் பயன்பாட்டுப் பொருள்கள் சிலவற்றை விற்பனை செய்து வருகிறது. இம்மாநிலத்தின் முக்கிய நகரங்களில் உள்ள கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளைத் தனது பயன்பாட்டுப் பொருள்களில் சிலவற்றை விற்பனை செய்யுமாறு கழகம் கேட்டுள்ளது. இது தவிர, தமிழ் நாடு உட்பட தென்னிந்திய மாநிலங்களில் பல்வேறு மாவட்டங்களில் இருப்பு வைப்பவர்கள்/வழங்குபவர்கள் பலரை நியமிப்பதன் மூலம் கழகம் விற்பனையை மும்முரப்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது. கழகத்தின் முக்கியமான பொருட்களைக் காட்சியில் வைப்பதற்காக முதல்தரமான காட்சி அறை அலுவலகம் ஒன்றினை சென்னை அரசாங்க மாளிகையில் மலைச்சாலைக்கு எதிரில் தொடங்கும் செயற் குறிப்பும் ஆலோசனையில் உள்ளது.

திரு. கே. போஜன்: இப்பொழுது இருக்கும் விற்பனை நிலையங்களைத் தவிர, நம் மாநிலத்தில் மேலும் பல நகரங்களில் விற்பனை நிலையங்களை ஏற்படுத்தி, விற்பனையை அதிகரிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதைத்தான் விவரமாகப் படித்துக் காண்பித்தேன்.

திரு. பி. வேலுசாமி: ஐயா, விற்பனை ஆகாமலிருக்கின்ற உற்பத்திப் பொருள்கள் யாவை? விற்பனை ஆகாமல் இருக்கும் பொருள்களின் மதிப்பு எவ்வளவு? எந்த எந்தப் பட்டறைகள் லாபகரமாக இருக்கின்றன? எவை எவை நஷ்டத்தில் நடைபெறுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்த விவரம் என்னிடம் இல்லை.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த சிறு தொழில் கார்ப்பரேஷன் நடத்திவரும் தொழிற்சாலைகளைச் சர்க்கார் ஊக்குவிக்கும் முகத்தான் சர்க்காருக்குத் தேவையான சாமான்களுக்கெல்லாம் தனி நபர்களிடத்திலே இன்டென்ட் கொடுக்காமல் இத்தகைய தொழிற்சாலைகளிடத்திலே கொடுக்க சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தேவையான பொருள்களை எப்படி வாங்கவேண்டும் என்பதற்கு விதிமுறைகளெல்லாம் இருக்கின்றன. நம்முடைய அரசாங்க உற்பத்தி நிலையங்களுக்கு முதலிடம் அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

Madurai–Ramanathapuram road

* 84 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that Madurai–Ramanathapuram road via Manamadurai which has a very heavy traffic has not